
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 6 | ஜூலை 1993 | இதழ் 6



வெளியிடுவோர் :

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002 (ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை

,, : பகல் 11-00—12-00...ஞாயிறு பள்ளி

,, : மாலை 5-30—6-30...திருமறை ஆய்வு & கலந்துரையாடல்

வியாழன் : மாலை 7-15—8-30...வேத ஆய்வுவகுப்புகள்

வெள்ளி : மாலை 7-00—9-00...ஜெப ஆராதனை

## இதழின் உள்ளே


1. உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் 1
2. யூகங்கள் 7
3. ஏவாள் என்ற முதல் பெண்மணி! 10
4. பூர்வபாதை 13
5. தேவன் என் ஜெபங்களைக் கேட்கிறார்! 22
6. நிறைவானது எது? 24
7. தேவன் அளித்துள்ள ஒரு மகத்தான புத்தகம் 26

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ

Dharapuram Road, KANGAYAM-638 701, Tamilnadu, India

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 6 JUNE—1993 Issue 6

**ஆசிரியவுரை**

## "உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்"

*அப்போஸ்தலனாகிய பவுலடியார், நீண்ட நாட்களாகவே, தான் நேரில் சந்திக்க வேண்டுமென்று ஆசைப்பட்ட, ரோமாபுரி பட்டணத்துக்குக் கிறிஸ்தவர்களுக்கு, நிருபம் எழுதும்பொழுது, பரிசுத்த ஆவியானவரின் ஏவுதல்படி, இந்த சிறப்புமிக்க தேவ ஆலோசனையை வெளிப்படுத்துகிறார். ''நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக* **உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்''** *என்கிறார் (ரோம 12;2)*

*புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவானவருக்கு அடுத்தபடியாகப் பிரபலமானவர் இந்த பவுலடியாரே. இம்மாமனிதர் பதிமூன்று நிருபங்களை எழுதியுள்ளார். இவைகளில் முதலாவது இடத்தைப் பிடித்திருப்பது ரோமர் நிருபமே. கிறிஸ்துவின் உபதேசம் மற்றும் செயல்பாடுகளை, நான்கு நற்செய்தி நூல்களும் விவரிக்கும் பொழுது, இந்த ரோமர் நிருபம், கிறிஸ்துவின் தியாக மரணத்தின் அதிமுக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. நிறைந்த கொள்கை விளக்கங்களை, கேள்வி-பதில் நடையில் இந்நிருபம் தனக்குள்ளாகக் கொண்டுள்ளது. இதைப் படிக்கின்ற ஒவ்வொருவரையும் மெய்க் கிறிஸ்தவ வாழ்க்கை வாழ இந்நிருபம் ஊக்கப்படுத்துகிறது கிறிஸ்துவானவரின் நற்செய்தியானதுவிசுவாசிப்பதற்கு மாத்திரம் அல்ல,*

அதன்படி வாழ்ந்து நீதிமான்களாக ஆக முடியும் என்பதை மிகத் திட்டமாய் எடுத்துரைக்கும் தன்னிகரற்ற நூல் இந்த ரோம நிருபம்.

தான் முன்பின் பார்த்திராத அதிகம் அறிமுகம் இல்லாத, தேவப்பிரியரும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுமாகிய அனைவருக்கும், இந்நிருபத்தை பவுலடியார் எழுதுகிறார். புறவினத்தாரிலிருந்து கிறிஸ்தவர்களாக மாறியவர்களை அதிகம் கொண்டது இந்த ரோம் பட்டணத்து திருச்சபை. அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கும் பெந்தேகோஸ்தே நாளில், பேதுருவின் முதல் நற்செய்திப் பிரசங்கத்தில் தங்களை ஆண்டவருக்காக ஒப்புக் கொடுத்தவர்களும், ஆசியா, மக்கதோனியா, கிரேக்கு நாடுகளில் பவுலடியார் ஊழியம் செய்த நாட்களில் மனமாற்றப்பட்டவர்களும், இச்சபையில் முக்கியமாக இருந்திருக்க வாய்ப்புண்டு. தன்னுடைய மூன்றாவது நற்செய்திப் பிரயாணத்தின் கடைசி நாட்களில், கிரேக்கத்தில் உள்ள முக்கிய பட்டணங்களில் ஒன்றான கொரிந்துவில் இருந்து கி.பி. 57-ல் இந்நிருபத்தை எழுதியுள்ளார்.

சரி, இந்தப் பின்னணியில் தான், புறவினக் கிறிஸ்தவர்கள் நிறைந்த சபைக்கு எழுதும்பொழுது, மனதைப் புதிதாக்க வேண்டிய அவசியத்தையும், மறுரூபமாக வேண்டியதின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறார். மனம் புதிதாகுதலும், மறுரூபமாகுதலும் ஒன்றோடொன்று இணைந்த செயல். முந்தினது இல்லாமல் பிந்தினது சாத்தியமல்ல. இந்த தேவ ஆலோசனையை சற்று விரிவாகப் பார்ப்போமா?

## மனம் புதிதாகுதல்

மனம் என்றால் எண்ணம், சிந்தனை என்பதாகும். கிறிஸ்துவானவருக்கு முன்னோடியாக வந்த யோவான் ஸ்நானகன் பிரசங்கத்தின் கருப்பொருளே, ''மனந்திரும்புங்கள்'' என்பதுதான் (மத் 3:2) நமதாண்டவர் பிரசங்கத்தின் மையமும் 'மனந்திரும்புங்கள்' என்பது தானே (மத் 4:17). மனதைப் புதிதாக்குவது மிக அவசியமான ஒன்று. ஏனெனில் மனமாகிய இருதயத்தின் நிறைவினால் தான் சொல் பிறக்கும் (லூக் 6:45). ஒருவனுடைய செயலுக்கு, அவன் இருதயத்தின் நினைவு அடிப்படை. பழைய பிரமாணத்தில் 'செயல்' தான் பாவம் என்றிருந்தது. ஆனால் நாம் வாழும் இந்தப் புதிய பிரமாணத்தில், ஒருவனுடைய எண்ணமே அவனைப் பாவியாக்க முடியும். பழைய ஏற்பாடு காலத்தில் விபச்சாரம் செய்தால் தான் அது பாவம். ஆனால் இப்பொழுது

'இச்சையோடே பார்த்தால் அது பாவம் (மத் 5:28) நம்முடைய எண்ணங்களே நம்மை நியாயந்தீர்க்கிறபடியால், மனதைப் புதிதாக்க வேண்டியது மிக மிக அவசியம்.

அப்படியானால், என்னுடைய மனதைப் புதிதாக்க நான் செய்ய வேண்டுவது என்னமோ எனக் கலங்கவேண்டாம், நாம் தவநிலையை மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை. துறவறமும் பூணத் தேவையில்லை: நீண்ட பிரயயணங்களை மேற்கொண்டு சரீரத்தை வருத்த வேண்டுவதில்லை, இருக்கின்ற இடங்களிலேயே, அந்த வேலையை நாம் செய்யமுடியும். ஆம், தேவனுடைய வார்த்தையைப் படிப்பதின் மூலம், நமது மனதை, எண்ணங்களை நாம் புதிதாக்க முடியும். பெரோயா பட்டணத்து மக்கள் **தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால்** தெசலோனிக்கேயாவில் உள்ளவர்களைக் காட்டிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள் (அப் 17:11) புதிதாக்கப் பட்ட சிந்தை உள்ளவர்கள் தான் நற்குணசாலிகளாக இருக்க முடியும்.

ஆக, நானும் நீங்களும் மனதைப் புதிதாக்க வேண்டுமானால் வல்லமையுள்ள தேவ வார்த்தைகளை நம் இருதயங்களில் பதிய வைக்கவேண்டும் தேவனுடைய வார்த்தை நம்மை பாவமற்ற ஒரு நிலைக்கு அழைத்துச் சென்று, நம்முடைய மனதைப் புதிதாக்கும். சங்கீதக்காரன் சொல்லும் பொழுது, நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன் என்கிறார் சங் 19:11). தேவனுடைய வார்த்தையை அறியாத பொழுது, நாம் பாவத்தில் நிலைத்திருப்பவர்களாகவே இருப்போம். பொதுவாகவே அறியாமை ஒருவனை கண்டிப்பாக தவறுக்கு வழிநடத்தும்.

இன்றைக்கு மத உலகில் பெருகிவரும் பெரும்பாலான ஒழுங்கீனங்களுக்கும், குழப்பங்களுக்கும் காரணம், தேவனுடைய வார்த்தைகளின்பால் கிறிஸ்தவர்களுக்குள்ள அக்கறையின்மையும், அதன் விளைவாக வரும் **வேத அறிவுக் குறைவும் தான்**, என்றால் அது தவறாகாது. கிறிஸ்துவை நேசிக்கிற ஒவ்வொருவரும், தேவனுடைய வார்த்தையாகிய வசனங்களை முறையாகப் படித்து, அறிந்து, அதன்படி நடக்க முடிவு செய்துவிட்டால், நிச்சயம் கிறிஸ்தவம் புறமார்க்கத்தாரால் பாராட்டப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஒரு உன்னத மார்க்கமாக ஒளி பெறும் வசனங்களின்பேரில் நமக்குள்ள அறியாமையை அகற்ற முயற்சி செய்வோம், வெற்றி பெறுவோம்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு நம்து நாட்டுத் தலைவர்கள், கல்வியறிவின் முக்கியத்துவத்தை உணர ஆரம்பித்துள்ளனர். மக்களை மடமையில் வைத்திருப்பது தான் தங்களுக்கு லாபம் என்று நினைத்த காலம் மலை ஏறி, ஜனங்கள் கல்வி ஒளி பெறுவது தான் நாட்டின் முன்னேற்றத்திற்கு நல்லது எனக் கண்டுபிடித்து முழுவேகத்துடன் செயல்படுகின்றனர். 'அறிவொளி இயக்கம்' என்று மாவட்டம் தோறும் ஏற்படுத்தி, ஜனங்கள் முழுக்கல்வி அறிவு பெற வழிவகுத்துக் கொடுக்கின்றனர். ''கல்லாமையை இல்லாமை'' ஆக்குவோம் என்பதே அவர்கள் கோஷம். கல்லாமை என்கிற அறியாமை, ஜனங்களை பல தவறுகளுக்கு அழைத்துச் செல்கிறது. அது தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்பதே அரசின் நோக்கம். உண்மையாகவே, நாட்டு நலனில் அக்கறையுள்ள தலைவர்கள், தங்கள் அரசியல் ஆதாயங்களை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை என்பதை நாம், இந்தச்சந்தர்ப்பத்தில் கவனிக்க வேண்டியது அவசியம்.

ஆனால் கிறிஸ்தவ மார்க்கத்தின் தலைவர்கள் என்றும், இறைத் தூதுவர்கள் என்றும், வரம் பெற்றவர்கள் என்றும் தங்களைத் தாங்களே அழைத்து, பவனி வருகிறவர்கள் கிறிஸ்தவர்களின் வேத அறிவைக் குறிதது கவலைப்படுவதாகத் தெரியவில்லை. பெருத்த வருத்தத்திற்கு உள்ளாக்கும் செயல்இது. கிறிஸ்தவர்களும் இந்த 'அற்புத'த் தலைவர்களின் பின்னால் அணி வகுத்து, ஆவிக்குரிய அழிவை நோக்கிச் சென்று கொண்டுள்ளனர். புரட்சிதாசன் மார்ட்டின் லூத்தர் காலத்துக்கு முந்தின நிலை திரும்ப வருகிறதோ என ஐயுற வேண்டியுள்ளது. நாட்டுத் தலைவர்களுக்கு ஜனங்களின்பால் உள்ள அக்கறை கூட, இந்த மதத் தலைவர்களுக்குக் கிறிஸ்தவர்களின் மீது இல்லையென்பது விந்தையிலும் விந்தை. வேத அறிவுக் குறைவு, ஒரு கிறிஸ்தவனை கண்டிப்பாக தவறுக்கு அழைத்துச்செல்லும். இதில் கிஞ்சித்தும் சந்தேகம் வேண்டாம். கிறிஸ்துவானவர் சொல்லும் பொழுது, ''நீங்கள் வேத வாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் **அறியாமல் தவறான எண்ணங் கொள்கிறீர்கள்**'' என்கிறார் (மத் 22:19). அறியாமல் இருப்பது தவறான எண்ணத்திற்கு வழிவகுக்கிறது. தவறான எண்ணம், தவறான செயலுக்கு வழிகாட்டாதா? சிந்தியுங்கள்.

பாவமறியாத நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவை கொலைக்கு ஒப்புக் கொடுத்ததே **அறியாமல்** நடந்துவிட்ட ஒன்று என்றே பேதுரு குறிப்பிடுகிறார்.(அப் 3:17)அப்போஸ்தலன் பவுல் தான் கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தினது, **அறியாமல்**

நடந்தது தான் என ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கிறார். (அப் 28: 9,10, I தீமேத் 1:13-15) அறியாமல் நேர்ந்துவிட்ட பெருந்தவறுகளை பாருங்கள். ஒருவேளை, அறியாமை என்பது மனிதனின் பார்வையில் மன்னிப்புக்கு ஏதுவானதாக இருக்கலாம். சமயங்களில் மன்னிப்புங் கூட கிடைக்கலாம். ஆனால் தேவனுடைய பார்வையில் அறியாமை ஒரு குற்றமே. மனுக்குலம் அனைத்தும் தம்முடைய சித்தத்தை அறிந்து கொள்ள வேண்டுமென கட்டளையிடுகிறார் (அப் 17:30,)

கிறிஸ்துவானவர் சொல்கிறபடி வேத வாக்கியங்களை நாம் கேட்டுப் பெற்றுக் கொள்வோம் (யோவா 6:45). சங்கீதக் காரன் கூற்றுப்படி அவைகளை இருதயத்தில் பதிய வைப்போம் (சங் 119: 11), பேதுரு ஆசிரியர் சொல்வதைப் போல், அவைகளில் உள்ள மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களை அறிந்து கொள்வோம். (IIபேதுரு 1:4). இப்படியாக நம்முடைய மனதைப் புதிதாக்குவோம்.

**மறுரூபமாகுதல் :**

'ரூபம்' என்றால் 'சாயல்' என்பது பொருள். இங்கே ரோமாபுரி கிறிஸ்தவர்களை மனதைப் புதிதாக்குவதன் மூலம் மறுரூபமாகுங்கள் என்று சொல்கிறார். அதாவது, பழைய சாயலைக் களைந்துபோட்டு, வேறொரு சாயலைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்கிறார். அது என்ன வேறு சாயல்?

பிதாவாகிய தேவன், மனிதனைப் படைத்த பொழுது தமது சாயலாகப் படைத்தார் என்று காண்கிறோம். (ஆதி 1:27). ஆனால், தேவன் ஆவியாயிருக்கிறார் என்பது நாம் அறிந்ததே (யோவான் 4:24). ஆக இங்கே, நாம் தேவசாயலாகப் படைக்கப்பட்டோம் என்பது, தேவனுடைய சிந்தை, குணம், சுபாவம் இவைகளுக்கு ஒப்பாகப் படைக்கப்பட்டோம் என்பது தான் அதன் பொருள். ஆனால், மனிதன் அந்நிலையிலிருந்து தனது பாவத்தின் மூலம் வீழ்ந்து விட்டான். மீண்டும் மனிதர்களாகிய நாம் தேவ சாயலாக மாற வேண்டுமென்பதே தேவனுடைய விருப்பம். வேத வாக்கியங்களின் போதனையும் அது தான்.

அதைத்தான், பவுலடியார் தனது சிறை நிருபங்களில் ஒன்றான பிலிப்பியரில் 'கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது' என்கிறார். (பிலி 2:5). கிறிஸ்துவின் நற்சிந்தனைகளை ஒருவன் பெற்றுக் கொள்ளும்பொழுது, தேவனுடைய ரூபமாக, சாயலாக மாற முடியும். அப்போஸ்தலனாகிய

பேதுரு நம்மை, ''திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாக ஆக வேண்டுமென்று ஆசைப்படுகிறாரே || பேதுரு 1:4) ஏன்? சுபாவம் என்பது எல்லா மனிதர்களுக்குள்ளாவும் இருப்பது. நல்ல சுபாவம் உள்ள மனிதர்களும் உண்டு. கெட்ட சுபாவம் உள்ள வர்களும் உண்டு. இங்கே பேதுரு ஆசிரியர், திவ்விய சுபாவம் (Divine nature) என்கிறார். அதாவது தெய்வீக சுபாவம், அந்த சுபாவமே இன்று நமக்குத் தேவை.

சரி, கிறிஸ்துவின் சிந்தையையும், 'தேவ சுபாவத்தின் பங்கையும்' நாம் எங்ஙனம் பெற்றுக் கொள்ள முடியும்? கொரிந் தியருக்கு பவுல் சொல்வதை தயவுகூர்ந்து கவனியுங்கள் ''ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்.'' (2 கொரி 5:17). புது சிருஷ்டி என்பதும் மறுரூபம் என்பதும் ஒன்றே. ஆக மறுரூபமாக மாற, ஒருவன் **கிறிஸ்துவுக்குள்** வரவேண்டும். கிறிஸ்துவுக்குள் என்பது, கிறிஸ்துவின் மெய்யான உபதேசத்துக்குள் என்பதே, கிறிஸ்துவின் இரட்சிப்பின் திட்டத்துக்குள் ஒருவன் வராத பட்சத்தில் கண்டிப்பாக மறு சாயலைப் பெற்றுக் கொள்ள முடியாது. திவ்விய சுபாவத்தில் நமக்குப் பங்கில்லையானால், பரலோகத்திலும் நமக்குப் பங்கில்லை!

அருமையான நண்பரே! நம்முடைய நிலை என்ன? மனதைப் புதிதாக்கி விட்டோமா? தேவ சாயலைப் பெற்றுள்ளோமா? கிறிஸ்துவின் சிந்தை நமக்குள்ளாக உள்ளதா? திவ்விய சுபாவமாகிய தெய்வீக சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாக மாறி விட்டோமா? உங்களுடைய பதில் 'இல்லை' என்பதானால், வேத வாக்கியங்களைப் பகுத்துப் படியுங்கள். தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள். மனதைப் புதிதாக்கி, மறுரூபமாகுங்கள். கர்த்தர் உங்களோடிருப்பாராக!

**E.Z.S. ராஜநாயகம்**

## இரட்சிப்பின் திட்டம்

நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்.
விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.

(மாற்கு 16:15-16)

# யூகங்கள்

தானாகவே காரியங்களை யூகித்துக் கொள்ளும் பழக்கமுள்ள ஒருவரை நம்மில் அநேகர் அறிந்திருப்போம். அப்படிப்பட்ட மனிதர்கள் தாங்கள் என்ன செய்யவேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்ற அனுமதியை ஒருபோதும் கேட்கமாட்டார்கள். மாறாக, இப்படிச் செய்தால் சரியாக இருக்கும் என தாங்களாகவே யூகித்துக் கொள்வார்கள். இப்படிப் பழக்கமுடைய அநேகரை நாம் உதாரணமாகக் காட்ட முடியும். இவர்களை நாம் யாரும் விரும்புவதில்லை. இந்தப் பழக்கம் உடைய ஒருவர் நம்மோடே இருப்பதை நாம் விரும்பாத பொழுது, தேவனுடைய காரியத்தில் தானே யூகித்துக் கொள்ளும் பழக்கமுடைய ஒருவனைக் குறித்து, தேவன் என்ன நினைப்பார் என நீங்கள் எண்ணுகிறீர்கள்?

மத உலகத்தில், இந்த மோசமான பழக்கம், அடிக்கடி, அநேகரால் செய்யப்படுவதை நாம் காண முடியும். இந்த மனிதர்கள் அறிவாளிகளாகவும், நியாயஸ்தர்களாகவும் இருப்பார்கள். இருப்பினும், தேவனோடு தங்கள் உறவு என்று வரும்போது, தங்கள் அறிவு, நியாயம் இவைகளை அடகு வைத்து விட்டு, நிறைய காரியங்களை தாங்களாகவே கற்பனை செய்து கொள்வார்கள். தங்கள் செயலை, தேவன் வித்தியாசமாகப் பார்க்கக் கூடும் என்ற உண்மையை, கணக்கிலேயே எடுத்துக் கொள்ள மாட்டார்கள். தாங்கள் செய்கின்ற எல்லாவற்றையும் தேவன் ஏற்றுக் கொள்வார் என்று தாங்களாகவே முடிவு செய்வார்கள்.

இங்கே குறிப்பிடுகிற மக்கள் யாரெனில், தங்கள் மதத்தலைவர்களின் போதனைகளுக்கு செவிகொடுத்து அவர்கள் சொல்வது எல்லாம் உண்மை என நினைப்பவர்கள் தான் இவர்கள். போதிப்பவர்களை ஒருபோதும் கேள்விகேட்கவே மாட்டார்கள். கேள்வி தான் இல்லை, அவர்கள் சொல்வதாகிலும் வேதத்தில் இருக்கிறதா என ஒப்பிட்டு பார்க்கவும் மாட்டார்கள். மாறாக, அவர்களை யாராவது ஒருவர் கேள்வி கேட்டுவிட்டால், தங்கள் நம்பிக்கை வேத வாக்கியங்களின் அடிப்படையில்தான் இருக்கிறது எனக் காட்ட முயற்சி செய்யாமல், கேள்வி எழுப்பியவரிடம் குறை கண்டுபிடித்து விமர்சிக்கத் தொடங்கிவிடுவார்கள். என்ன ஒரு கவலைக்குரிய போக்கு பாருங்கள்.

கிறிஸ்துவின் மீது நான் கொண்டிருக்கும் திடநம்பிக்கை, செயல்பாடுகள் இவைகளைப் பற்றிக் கேள்வி வரும் பொழுது,

அதை நான் வரவேற்கவே செய்ய வேண்டும். எதை விசுவாசிக்கிறேன் என்பதை வேத வசனங்களிலிருந்து விளக்கிக் காட்டும் ஒரு நல்ல சந்தர்ப்பமாகவே அதைக் கருதவேண்டும், அதை நான் செய்ய முடியாதபோது, நான் என்ன போதிக்கப்பட்டேன் என்ற கேள்வியை எழுப்பி, சிந்திக்க தொடங்கவேண்டும்.

உதாரணமாக, நாம் பாவத்திலே பிறந்திருக்கிறோம், இரட்சிப்புக்கு விசுவாசம் மட்டும் போதுமானது, இரட்சிப்புக்கும் ஞானஸ்நானத்திற்கும் சம்பந்தம் கிடையாது, நிறைய சபைகளை கர்த்தர் ஏற்றுக் கொள்கிறார். நாம் தரித்துக் கொள்கிற பெயர் முக்கியமானதல்ல, பரலோகத்திற்கு பலவழிகள் உண்டு, இப்படி பல காரியங்களை தாங்களே யூகித்துக் கொள்கிற மக்களை நினைத்துப் பாருங்கள். மேற்சொன்ன தவறான கொள்கைகள் எந்த விதமான எதிர்ப்பும் இன்றி இலட்சக்கணக்கான மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரபலமான போதனைகள். மெஜாரிட்டி மக்கள் ஏற்றுக்கொள்வதால், தேவனும் அவைகளை கட்டாயம் ஏற்றுக் கொள்வார் என முடிவு செய்யப்படுகிறது. சத்தியத்தை பார்க்க மாட்டோமென தங்கள் கண்களை இறுகமூடி, மனிதனால் உண்டாக்கப்பட்ட போதனைகளை ஏற்று அவைகளின் படி செய்து, முடிவிலே தங்கள் ஆத்துமாக்களை இழந்து போகிற மக்களை நினைக்கும்பொழுது மிகுந்த வேதனையாக உள்ளது.

கர்த்தருடைய சபையிலே கூட, கிறிஸ்தவர்களுக்கு, இந்த விதமான தவறுகள், தங்கள் எண்ணங்களில் உண்டாகலாம். ஆராதனையைப் புறக்கணித்தும், தவறவிட்டும் கூட, தாங்கள் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவர்களாக இருக்கமுடியுமென்று அநேகர் நினைக்கின்றனர். கர்த்தருக்குக் காணிக்கை கொடுப்பது அவ்வளவு அவசியமல்லவென்றும், உலகின் பிற பகுதிகளுக்கு சுவிசேஷம் கொண்டு செல்வது அவ்வளவு முக்கியமானதல்லவென்றும், இப்படி இன்னும், தேவன் விரும்பாத, வேதம் போதிக்காத அநேக காரியங்களை, ஒரு சராசரி கிறிஸ்தவன் தானாகவே முடிவு செய்து விடுகிறான். இது கிறிஸ்துவின் போதனைகளுக்கு விரோதமானது.

ஆவிக்குரிய காரியங்களில், சத்தியம் என்ன சொல்கிறது எனக் கண்டறிய, நாம் அனைவரும் தேவனுடைய வார்த்தைக்குத் தான் செல்லவேண்டும். எதையும் நாம் யூசிக்க வேண்டிய அவசியமில்லை. தேவையான நேரம் ஒதுக்கி, வேத வாக்கியங்களை வாசித்து, தியானித்து அவைகள் பேசும்படியான வாய்ப்பை நாம் ஏற்படுத்திக் கொடுப்போமானால், தேவன் நம்மை என்ன செய்யச்

சொல்கிறார் என்பதை, மிக விரைவில். துல்லியமாக அறிந்து கொள்ளமுடியும். நம்மிடம் தேவசித்தம் உள்ளது. தேவனுடைய வார்த்தையைப் படித்து, அது என்ன போதிக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்ளும்படி, அது தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது. வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் என்று கிறிஸ்து சொல்கிறார் (யோ 5:39) அதன்மூலம் சத்தியம் நம்மை விடுதலையாக்கும் (யோ 17:17). பவுல் அப்போஸ்தலன் சொல்லும்பொழுது, எந்த நற்கிரியையுஞ் செய்ய வேத வாக்கியங்கள் போதுமானது என்கிறார் (II தீமுத் 3:16:17) அப்போஸ்தலனாகிய பேதுரு, ஜீவனுக்கும், தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் கர்த்தருடைய வார்த்தை தந்தருளியிருக்கிறது எனச் சொல்கிறார் (II பேதுரு 1:3) நாம் திருவசனத்தின்படி செய்கிறவர்களாயிருக்க வேண்டும் எனவும் (யாக் 1'22), சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே, கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான் என்றும் யாக்கோபு ஆசிரியர் கூறுகிறார் (யாக் 1;25). நாம் பாக்கியவான்களாயிருப்பதற்கு அவருடைய கற்பனைகளின்படி செய்ய வேண்டும் என கிறிஸ்து சொல்கிறார் (வெளி 22;14). அது மாத்திரமல்ல, தேவனுடைய வார்த்தையோடு, கூட்டவும் வேண்டாம், குறைக்கவும் வேண்டாம் என்றும் கட்டளையிடுகிறார் (வெளி 22:18,19).

இப்பொழுது, படிப்பது, சத்தியத்தை அறிவது, கீழ்ப்படிவது அவருடைய உபதேசத்தில் நிலைத்திருப்பது, மரண பரியந்தம் உண்மையாய் இருப்பது ஆகிய இவைகளை கர்த்தர், நமக்குச் சொல்லியுள்ளபடி செய்வோமானால், கர்த்தரைப் பற்றியும், அவருடைய சித்தத்தைப் பற்றியும் நாம் எதையாகிலும் யூகித்துக் கொள்வதற்கு ஒன்றுமேயில்லை. கட்டாயம் நாம் கீழ்ப்படியவே வேண்டும். மிக எளிமையான உபதேசம்.

தேவனோடு நமக்குள்ள உறவைப் பற்றி நாம் அதிக கவனம் செலுத்த தேவன் உதவி செய்யட்டும். நாம் யாரும் நம்முடைய இரட்சிப்பைக் குறித்து அலட்சியமாக இருக்க வேண்டாம். நம்முடைய ஆத்துமாவைக் குறித்து கவலையீனமாக இருக்கவேண்டாம். நாம் மனிதர்களிடத்தில் இருந்து கேட்டவைகளை வைத்து நித்திய நம்பிக்கையை அபாயத்திற்குள்ளாக்கவோ அல்லது என்ன தான் ஆகும் பார்க்கலாம் என நினைத்து விபரீத விளையாட்டு விளையாடவோ வேண்டாம். தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ளத் தேடுவோம், அவரை முன்னிலைப்படுத்துவோம், அவரைச் சந்திக்கும்படியாக நம்முடைய ஆத்துமாக்களை ஆயத்தம செய்வோம். யூகங்களுக்கு முடிவு கட்டுவோம்.

J.C. சோட்

# ஏவாள் என்ற முதல் பெண்மணி !

"தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தில் சகலவித பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டு வந்தார்.., அப்படியே ஆதாம் சகலவித நாட்டு மிருகங்களுக்கும் ஆகாயத்து பறவைகளுக்கும், சகலவித காட்டு மிருகங்களுக்கும் பேரிட்டான். ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை" (ஆதி.2:1920)

"பின்பு, தேவனாகிய கர்த்தர் : மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்" (2. 18)

"அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான் : அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தை சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார். அப்பொழுது ஆதாம் : இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள். இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியால் மனுஷி என்னப்படுவாள் என்றான்" (வ 21–23).

"ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான் : ஏனெனில், அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்". (ஆதி 3:20).

இப்போது நாம் நமது மனோரதத்தில் ஏறி பல நூற்றாண்டுகளுக்கு முன் சென்று, அந்த முதல் தம்பதியைப்பற்றி சிறிது தெரிந்து கொண்டு திரும்புவோமா? அவர்களுடைய உறவு எவ்வாறிருந்தது? ஆதாமுடைய தேவைகளை மட்டும் சந்திக்கும் ஒரு வேலைக்காரியாக, அந்தப் பெண் செயல் பட்டாளா? இன்றைய சமுதாயத்தில் சில பெண்களில் பங்கு இப்படித் தானே காணப்படுகிறது. ஆனால் தேவன் இவ்வாறான ஆண்-பெண் உறவையா ஏற்படுத்தினார்?

தேவன் உண்டாக்கிய ஒரு ஜீவராசியின் உடலிலிருந்து ஒரு பகுதியை எடுத்து, புதிய வேறொரு உயிரை உருவாக்கியதாக,

ஒரே ஒரு நிகழ்ச்சி பற்றி மட்டுமே வேதாகமம் கூறுகிறது. ஏவாளின் பிறப்பு மட்டுமே இத்தகைய சிறப்பைப் பெற்றதாக அறிகிறோம். "**நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படி-யேயும் மனுஷனை உண்டாக்குவோமாக**" என மனிதனை உண்டாக்கும் போது மட்டுமே தேவன் கூறினார். (ஆதி 1;26). எனவே, தேவன் பூமியின் மண்ணிலிருந்து ஆதாமை தமது சாயலாக உண்டாக்கி, ஜீவனை அவன் நாசிக்குள் ஊதி, அவனை ஜீவாத்து-மாவாக்கினார்.

மனிதனின் விலா எலும்பு ஒன்றை எடுத்து பெண்ணை உண்டாக்கினார். எனவே சகல ஜீவராசிகளிலும் சிறப்பு பெற்ற-வளாக அவள் விளங்கினாள். தேவனின் சாயலாகப் படைக்கப்-பட்ட ஜீவ ஆத்துமாவாகிய ஏவாள், ஆதாமின் உடலின் ஒரு பாகமாகவும் இருந்தாள்.

ஏவாளின் பங்கு என்ன? அவளை "மனிதனுக்கு ஏற்ற துணை" என தேவன் அறிவித்தார். ஆதாமை அவள் முழு மனிதனாக்கினாள். மனித உற்பத்திக்காக, ஆணில் ஒரு பங்கும் பெண்ணில் ஒரு பங்கும் என உடலளவில் உண்டாக்கியதுபோல, சகல காரியங்களும் நிறைவு பெற ஆண் பெண் இருவருடைய ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது. பெண்ணின் மென்மையான உடல்வாகும், வீட்டுப்பராமரிப்புக் குணங்களும், ஆணின் வலிமை யோடும், குடும்பத் தேவைகளைச் சந்திக்கும் அவனது உழைப்-போடும் இணைந்து செயல்படுகின்றன. சமுதாயத்தில் உழைப்-பவனாக மனிதன் செயல்படும் வேளையில், வீட்டிலிருந்து கொண்டு சிறப்பான குடும்ப உறவை வலுப்படுத்தி, உணர்வுள்ள நிலையான குடும்பங்களை பெண் உருவாக்குகிறாள். ஆவிக்குரிய காரியங்களில், தேவனுடைய ஆராதனையில் ஆண் வழி நடத்துகிறான். அதே வேளையில், பிள்ளைகளுக்கு வேத போதனைகளை தினமும் அளித்து அவர்களை நல்வழியில் நடத்தும் பணியை பெண் செய்-கிறாள்.

பெண்ணுடைய செயலை விவரிக்கும் மற்றொரு வார்த்தை வேதாகமத்தில் காணப்படுகிறது. பெண் ஒரு உதவிக்காரி. அவள் ஆணை முழு மனிதனாக்கும் சக்தி படைத்தவள். ஆதாமின் வாழ்-வில் விரும்பி இணைந்த ஒரு பங்குதாரராக அவனுக்கு சகல காரியங்களிலும் உதவும் ஒரு பெண்ணாக ஏவாளை தேவன் ஏற் படுத்தினார். இன்றைய நாட்களிலும், பெண்கள் தங்கள் கணவன் பேரில் இத்தகைய ஒரு நல்லுறவை மேற்கொண்டு நடந்து வந்தால் குடும்பங்களில் சாதாரணமாகத் தோன்றும் பிரச்சனைகள் பல

மறைந்து போகும். தேவனின் திட்டப்படி, நமது இல்லங்களில் சமாதனமும் நிலவும். என்றபோதிலும், தான் தேவனோடு நேரிடை உறவு கொண்ட ஒரு தனிப்பட்ட ஆத்துமா என்பதையும் அதே சமயத்தில் ஏவாள் உணர்ந்தாள். காயின் பிறந்தபோது, **''கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன்''** என ஏவாள் கூறினாள் (ஆதி 4:1). அவள் அன்று கூறிய இவ்வார்த்தைகள் எல்லாக் காலத்திலும் உள்ள பெண்களுக்கும் முன் மாதிரியாக அமைந்துள்ளன. தேவன் தாமே தனக்கு ஒரு பரிசை அளித்தார் என்றும், அது இந்த வேளையில் ஒரு மகன் என்றும், தானே அப்பரிசைப் பெற்றுக் கொண்டவள் என்றும் ஏவாள் அங்கீகரித்தாள். கொடுத்தவருக்கும் பெற்றுக்கொண்டவளுக்கும் இடையே மனம் திறந்த அணுகுமுறை ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. தேவனுக்கு கனம் செலுத்த வேண்டிய தனது உறவை ஏவாள் அறிந்திருந்தாள். குடும்ப அமைப்பில் அவளுடைய பங்கையும் அவள் அறிந்திருந்தாள். நமது முதல் தாய் தோன்றிய காலத்திற்கும் இன்றைய காலத்திற்கும் இடையே பெரிய இடைவெளி இருந்த போதிலும் அந்த தாயை முன்னுதாரணமாகக் கொண்டு செயல் படவேண்டிய பொறுப்பு இன்றைய பெண்மணிகளுக்கு உண்டு

B.B. சோட்

R.R. நாயகம்

# சாத்தானுக்கு எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் அளிக்காதீர்!

ஒரு மனிதன் முதல் முறையாக ஏற்றுக்கொண்ட ஒரு பெரும் பணியை மிகச் சிறப்பாக செய்து முடிப்பது மிகவும் அபூர்வமான செயல். இவ்வாறான பணியில் அவன் அபார வெற்றி அடையும் போது எல்லோருமே அவனை அதிர்ஷ்டசாலி என பாராட்டுவர். சாத்தான் எடுத்துக்கொள்ளும் வெற்றி முயற்சிகள் எவ்வளவு வித்தியாசமானவையாக இருக்கின்றது!

சோதனையில் அவனது முதல் அனுபவமே அவனுக்கு அபார வெற்றியை அளித்துள்ளது (ஆதி 3). இன்றைய நாள்வரை, அச்செயலுக்கான சாபத்தை அவன் அனுபவிக்க வேண்டிய நிலையில் இருந்த போதிலும் (வ 14), தன்னுடைய முயற்சியில் அவன் தளர்ந்து போனதாகத் தெரியவில்லை. அவனுடைய ஏமாற்று



(21-ம் பக்கம் பார்க்கவும்)

# பூர்வ பாதை

ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு சிண்டு பிடித்து அலையும் நாமகரண சபைகளும் அவைகளின் குழப்பயான கொள்கைகளும், சட்டதிட்டங்களும், சத்தியத்தைத் தேடும் மக்களுக்கு ஒரு பெரும் தடைக்கல்லாக அமைந்துள்ளது. இத்தகைய பிரிவினைக் கூட்டங்களின் முரண்பாடான போதனைகளால், நேர்மையான மக்களில் பலர் சோர்வுற்று, சத்தியத்தைத் தேடுவதையே தவிர்த்து விடுகின்றனர். இப்படிப்பட்ட குழப்பத்தின் விளைவாக இலட்சக்கணக்கான நாணயமான மக்கள் வீழ்ந்துபோன நிலையில் வாழ்கின்றனர். எனவே, நித்திய இராஜ்ஜியத்தை அடைய வழி காட்டும் தூய புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தின் நிச்சயமானத் திட்டத்தைப் பற்றி மிக உன்னிப்பாக நாம் கவனிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். கிறிஸ்தவர்களும் கர்த்தர் பேரிலுள்ள தங்களுடைய விசுவாசத்தை உறுதிப்படுத்திக் கொள்ள இது உதவும்.

எனவே, வேதாகமத்தின் வெளிச்சத்தில் உங்கள் மத நம்பிக்கைகளையும், நடைமுறைகளையும் பரிசீலித்துப் பார்க்க இக்கட்டுரையைக் கவனமாகப் படிக்க வேண்டுகிறேன்.

தேவனுடைய கற்பனைகளை சகல காலங்களிலும் மனிதனுக்கு அவர் கூறி வந்திருக்கிறார் (எபி 1:1-2; ரோ 1:19-20). ஆனால் பரிதாபம்! தேவனுடைய கட்டளைகளை மக்கள் எப்போதுமே மீறி நடந்து வந்துள்ளனர். விலக்கப்பட்ட கனியைப் புசித்து, ஆதாமும் ஏவாளும் தேவனுடைய கட்டளையை மீறினார்கள் (ஆதி 3). மோசமான கனிகளை காணிக்கையாகக் கொண்டு வந்து தேவனுடைய விருப்பத்திற்கு, அல்லது வழிக்கு, விலகி நடந்தான் காயீன் (ஆதி 4). நேவாவின் நாட்களிலே, இப் பூமியில் கொடுமை செய்த மக்கள் ஜலபிரளயத்தால் அழிக்கப்பட்டனர் (ஆதி 6:12; 7:21-23). தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இனமாகிய இஸ்ரவேல் மக்களும் அவருடைய சட்டத்தை மீறி தக்க தண்டனையை அடைந்தனர்.

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்த பின்னர் வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளிலே, கர்த்தருடையராஜ்ஜியம் ஆகிய புதிய ஏற்பாட்டு சபை ஜெருசலேமிலே கி.பி 33ம் ஆண்டு நிறுவப்பட்டது (அப் 2). அன்றைய ரோம சாம்ராஜ்யம் முழுவதுமாக அது விரைவில் பரவிற்று. [கொலோ 1:23]. அந்தியோக்கியா, ரோம், கொரிந்து, கலாத்தியா போன்ற பல இடங்களில் பிராந்திய சபைகள் தோன்றின, அவற்றில் பல வல்லமையுள்ளவைகளாகவும் சுதந்தரமாகவும் செயல்பட்டன.

என்ற போதிலும், தூய புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தின் கொள்கைகளுக்கு விலகி மாறுபாடான போதனை வரும் என பரிசுத்த ஆவியானவர் தீர்க்கத்தரிசனமாக எச்சரித்திருந்தார். (தீமோ 4: 1-4 ; 2 தீமோ 4:1—4 ; அப் 20:28-32). கலாத்திய கிறிஸ்தவர்கள் விரைவிலேயே மாறுபாடான சுவிசேஷத்திற்குத் திரும்பினர். [கலா 1:6-9]. கிறிஸ்துவின் எளிய போதனைகளிலிருந்து கொரிந்து கிறிஸ்தவர்களும் மாறக்கூடும் என்ற பயம் அப்போஸ்தலர் பவுலுக்கு இருந்தது. (2 கொரி 11: 2-4).

இரண்டாம் நூற்றாண்டிற்கு மேல், வேதாகமத்திற்கு மாறுபாடான பரிசுத்த தண்ணீர்; மண முடிக்காத நிலை, உத்தரிக்கிற ஸ்தலம், குழந்தை ஞானஸ்நானம், அப்பமும் இரசமும் இயேசுவின் உடலும் இரத்தமுமாக மாறுதல் போன்ற இன்னும் பல தவறான, வித்தியாசமான போதனைகளும் பழக்கங்களும் தோன்றின. மீண்டுமாக, தேவனின் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய ஏற்பாட்டு மக்களாகிய கிறிஸ்தவர்கள், பிசாசின் போதனைகளுக்கு எளிதில் இரையாகிப் போய், தூய புதியஏற்பாட்டுக் கிறிஸ்தவத்திலிருந்து விலகிப் போனார்கள்.

பல நூற்றாண்டுகள் ஆவியின் இருளில் மூழ்கிப் போயின 15ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சீர்திருத்த இயக்கம் தொடங்கிற்று. மார்ட்டின் லூதர் போன்றவர்கள் கத்தோலிக்க மதத்தில் நிறைந்து போன தவறுகளைத் திருத்தி, சீர்படுத்த பெரிதும் முயன்றனர். ஆனால் அவர்கள் தோல்வியையே தழுவ வேண்டியதாயிற்று தொடர்ந்து புராட்டஸ்டண்ட் சபைகள் தோன்றி ஐரோப்பா கண்டம் முழுவதுமாக பரவிற்று, துர் அதிர்ஷ்டவசமாக, புராட்டஸ்டண்டுகளும் கத்தோலிக்க மதத்தின் பல சட்ட திட்டங்களை ஏற்றுக் கொண்டு தவறான பாதையில் நடந்து கொண்டிருந்தனர்.

18ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புதிய ஏற்பாட்டு சபையை புதுப்பிக்கும் மறுமலர்ச்சி இயக்கம்தோன்றியது. பல பிரிவினை சபைகளைச் சார்ந்த அலெக்சாண்டர் காம்பெல், எலியாஸ் ஸ்மித் போன்ற நேர்மையான மக்கள், சுவிசேஷத்திற்குப் புறம்பான தங்கள் சபைக் கொள்கைகள், நம்பிக்கைகள், பாரம்பரியங்கள் யாவற்றையும் புறக்கணித்து விட்டு வேதாகமத்தில் காணப்படும் முதல் நூற்றாண்டு தூய புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்திற்குத் திரும்பிச் செல்ல வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர். இன்றைய பிரிவினை சபை மக்களின் கண்களைத் திறக்கக் கூடிய செயலாக இது அமைய வேண்டும். நேர்மையானவர்கள் இன்னும் தங்கள் கண்களை மூடிக் கொண்டிருக்கத் தேவையில்லை,

தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ரவேல் நாடு சட்டங்களை மீறி கெட்டுப் போன வேளையில், எரேமிய தீர்க்கதரிசி அவர்களை வேண்டிக் கொள்ளுவதைக் கவனியுங்கள். ''வழிகளிலே நின்று பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள். .'' (எரே 6:16). அதுபோலவே, 20ம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களாகிய நாமும் நாமகரண சபைகளைச் சார்ந்த நமது நண்பர்களைப் பார்த்து அக்கறையோடு வேண்டிக் கொள்வதெல்லாம், மனிதன் உருவாக்கிய சபைகளையும், அவற்றின் கொள்கைகளையும் உதறி விட்டு நமது தேவனிடத்தில் உடனே திரும்பி வாருங்கள் என்பதே, உண்மையான கிறிஸ்தவத்தைப் புரிந்து கொள்ள சிலர் சிரமப்படுகின்றனர். இன்னும் சிலரோ அப்படி ஒரு உண்மையான கிறிஸ்தவம் இருக்கக் கூடுமோ என்ற ஐயப்பாட்டை வெளியிடுகின்றனர். அப்படியே ஒரு உண்மை சபை இருப்பினும் அதை அடையாளம் கண்டு கொள்வது எவ்வாறு? நித்திய ஜீவியத்தைப் பற்றிய தெளிவான படப்பிடிப்பை கீழே காணுவோம்.

## தேவன் அதை திட்டமிட்டார்

தேவனின் நிலையான திட்டத்தின் ஒரு பகுதியாக சபை விளங்குகிறது. அச்சபையின்வழியாக அவருடைய அத்தியந்தஞானம் நமக்கு விளங்குகிறது. எந்த ஒரு நாமகரணக் கூட்டமோ அல்லது குழுவோ அதைச் செய்ய இயலாது. கர்த்தராகிய கிறிஸ்துவின் சபையின் மூலமாக தேவன் சதாகாலமும் மகிமை படத்தக்கவராக இருக்கிறார். (எபே 3: 9-11, 21). கடந்த நூற்றாண்டுகளில் பல மதங்களையும் மனிதன் தோற்றுவித்துள்ளான். இந்தியாவில் மட்டும் ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கான விலைமதிப்பற்ற உயிர்களும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களும் மத வெறிக்குப் பலியாகின்றன. இங்கு மட்டுமல்ல, உலகின் பல பகுதிகளிலும் உண்மை கிறிஸ்தவம் பரவபெரும் தடைக்கல்லாக அமைந்துள்ளது, தூய்மையற்ற பிரிவினைச் சபைகளே.

## சபை பற்றி தேவன் முன்னுரைத்தார்

''கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடு முடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடி வருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து : நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெ

னில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்'' (ஏசாயா 2;23).

நாம் கவனமாக சில குறிப்புகளை இங்கே பார்ப்போம்:

1. என்ன ஸ்தாபிக்கப்படும்? .. கர்த்தருடைய ஆலயம்
2. எப்போது ஸ்தாபிக்கப்படும்? .. கடைசி நாட்களில்
3. யாருக்காக ஸ்தாபிக்கப்படும் .. எல்லா ஜாதிகளுக்கும்
4. எங்கே அது ஸ்தாபிக்கப்படும்? .. எருசலேமில்

சுருங்கக் கூறின், யூத மதத்தின் கடைசி நாட்களில், கர்த்தருடைய ஆலயம் எருசலேமில் ஸ்தாபிக்கப்படும். (1 தீமோ 3:15; எபி 3:6; எபே 2:18-20; அப் 2:14-47 ஆகிய வசனங்களை ஒப்பிட்டுப் பாருங்கள்).

''அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தில் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழுப்பப் பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டு வந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்'' (தானி 2.44).

ரோமருடைய ஆட்சி காலத்திலே கர்த்தருடைய நித்திய இராஜ்யம் நிறுவப்படுவதாக இந்த தீர்க்கத்தரிசனம் உரைக்கிறது. இந்த தீர்க்கத்தரிசனம் நிறைவேறிற்றா இல்லையா என்பதை நாம் சோதித்துப் பார்ப்போம்.

## கிறிஸ்து சபையை உண்டாக்குவதாக வாக்களித்தார்

மனித குமாரனாகிய தன்னை யாரென்று மக்கள் நினைக்கிறார்கள் என இயேசு ஒரு முறை கேட்டபோது, மக்களின் தவறான அபிப்பிராயம் தெரிய வந்தது. ஆனால் சீமோன் பேதுருவோ ''நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து'' என்றான் கிறிஸ்து அவனை நோக்கிக் கூறினார் : ''மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன். நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை'' (மத் 16;16-18).

நமது கர்த்தருடைய வாக்குத்தத்தத்திலிருந்து சில முக்கிய காரியங்களை இங்கு காண்போம் ;

1. கிறிஸ்து சபையைக் கட்டுகிறவர்.

2. அவர் ஒரே ஒரு சபையைக் கட்டுவார்

3. எனது சபையைக் கட்டுவேன் என அவர் கூறியதால் அது அவருடைய சபையாக இருக்கும்.

4. ஜீவனுள்ள தேவனின் குமாரனாகிய இயேசுகிறிஸ்து என்ற சத்தியத்தின் மேல் அது கட்டப்பட்டிருக்கும்.

(எபே 2:19-20; 1 கொரி 3:11 ஆகிய வசனங்களைப்பார்க்க)

ஒரு கத்தோலிக்க சபையையோ, ஒரு புராட்டஸ்டண்ட் சபையையோ, அல்லது ஒரு பெந்தெகொஸ்தே சபையையோ கட்டுவதாக இயேசு ஒருபோதும் வாக்களிக்கவில்லை என்பதை தயவுகூர்ந்து கவனியுங்கள். அல்லது பேதுருவின் மேலோ, வேறு ஒரு நாளிலோ, சந்தர்ப்பத்திலோ ஒரு சபையைக் கட்டுவதாக அவர் வாக்களிக்கவில்லை.

## கிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலர்களும் தங்கள் போதனைகள் மூலம் அதை தயாரித்தனர்.

''மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது'' என யோவான் ஸ்நானன் போதித்தார் (மத் 3:2). இயேசுகிறிஸ்துவும் அவருடைய 12 அப்போஸ்தலர்களும் அதே செய்தியைப் போதித்தனர் (மத் 4:17: 10:7). பின்னர் 70 சீடர்களும் அதே காரியத்தைப் போதித்தனர் (லூக்கா 10:1,8).

இராஜ்ஜியம் சமீபித்திருப்பதாக மொத்தத்தில் 81 பேர்கள் போதித்தனர். பரிசுத்த ஆவியானவரின் வாக்குத்தத்தத்தைப் பெறுமளவும் எருசலேமில் தங்கியிருங்கள் என இயேசு தமது அப்போஸ்தலர்களுக்குக் கட்டளையிட்டார் (லூக் 24:49).

கர்த்தர் தங்களை விட்டு விலகி பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதைக் கண்ட அப்போஸ்தலர்கள் பின்னர் எருசலேமிற்குத் திரும்பிப்போய் அங்கு தங்கியிருந்தனர் (லூக் 24:50-53; அப் 1:4-13).

தேவனுடைய இராஜ்யமாகிய தூய புதிய ஏற்பாட்டு சபை நிறுவப்படும் தயார் நிலை உருவாயிற்று.

## பெந்தெகொஸ்தே நாளிலே சபை நிறுவப்பட்டது

பல அப்போஸ்தலர்களின் வாழ்நாளிலே ராஜ்யம் வல்லமையோடே வருவதாக இருந்தது (லூக் 9:1). பரிசுத்த ஆவியானவரால் அந்த வல்லமை வரவேண்டியிருந்தது (அப் 1:8), கர்த்தர்

உயிர்த்தபின் வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளிலே, பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மேல் இறங்கினார் (அப் 2:1-4) அதன் விளைவாக திரளான மக்களுக்கு பேதுருவும் பிற அப்போஸ் தலர்களும் நற்செய்தியை முதல் முறையாகப் போதித்தனர். தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட ஏறக்குறைய 3000 பேர் அன்று ஞானஸ்நானத்தில் கீழ்ப்படிந்தார்கள். கர்த்தர் அவர்களை சபை-யில் சேர்த்தார் (அப் 2:14 38: 41,47). இச்செயலுக்கு முன்பாக சபை என்பது எதிர்காலத்தில் குறிப்பிடப்பட்டு வந்தது; இந் நிகழ்ச்சிக்குப் பின்னர், சபை ஏற்கனவே நிறுவப்பட்டு விட்டதாக வேதாகமத்தில் காணமுடிகிறது. ஆம், திட்டமிடப்பட்டு, தீர்க்கத் தரிசனமாகக் கூறப்பட்டு வாக்களிக்கப்பட்டு, உருவாக்கப்பட்ட உண்மை சபை நமது கர்த்தரால் கி.பி. 33ம் ஆண்டு எருசலேமிலே ஸ்தாபிக்கப்பட்டது.

இது கத்தோலிக்க, புராட்டஸ்டண்ட், அல்லது பெந்தெ-கோஸ்தே சபை அல்ல. இந்தியாவிற்கு கிறிஸ்துவின் உண்மையான சபை வந்ததா என சிலர் வியப்புடன் வினவக் கூடும். 16ம் நூற்றாண்டிலே, வெள்ளையர்கள் நம் நாட்டிற்கு வரும் முன்னர், கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களில் ஒருவரான தோமா கி.பி. 52ல் இந்தியாவிற்கு வந்து தூய நற்செய்தியைப் போதித்ததாகவும், புதிய ஏற்பாட்டு சபையில் பல பிராந்திய சபைகள் தென் இந்தி-யாவின் பல பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டதாகவும் நம்பப்படுகிறது இவை மார்த்தோமியர் அல்லது ஜாக்கோபைட் என்ற பிரிவுகள் அல்ல, சபை வரலாறுகள் பற்றிய விவரங்கள் அக்காலகட்டத்தில் அதிகமாகத் தெரிய வாய்ப்பில்லாது போயிற்று.

சரீரமாகிய சபையை உண்டாக்கியவரும், தலைவரும் இரட் சகரும் கிறிஸ்துவே (மத் 16:18, எபே 5:23). எனவே, அவருக்குச் சொந்தமான சபையை **கிறிஸ்துவின் சபை** என வேதாகமம் அழைக்கிறது (ரோ 16:16 மத் 16:18). சபையின் உறுப்பினர்கள் **கிறிஸ்தவர்கள்** என்று மட்டுமே அழைக்கப்படுகின்றனர் (அப் 11:26; 1 பேது 4:16). அதற்கு அதிகமாகவோ, குறைவாகவோ, வித்தியாசமாகவோ அவர்கள் அழைக்கப்படுவதில்லை. மனிதத் தலைவனையோ கொள்கை விளக்கப்புத்தகத்தையோ அவர்கள் அறிய மாட்டார்கள் (1 பேதுரு 3-22; கொலோ 1: 1 கலா 1:7-9)

வாரத்தின் ஒவ்வொரு முதல் நாளிலும் அவர்கள் ஆராதிக் கின்றனர் போதித்தல், ஜெபம் செய்தல், இசைக்கருவிகளின்றி வாய்ப்பாட்டுகளால் தேவனை மகிமைப்படுத்துதல், கொடுத்தல், அப்பம் பிட்குதல் ஆகியவை அவர்களுடைய ஆராதனை முறை யாகும். (அப் 2:42 ; 20:7; கொலோ 3:16 : 1 கொரி 16; 1-2).

ஒவ்வொரு பிராந்திய சபையும் மூப்பர்கள், உதவிக்காரர்கள், போதகர்கள், உறுப்பினர்களுடன் சுதந்தரமாக செயல்படுபவை. (பிலி, 1:1; அப் 6:1-6), அவர்கள் எல்லோருமே சகோதரர்கள். குரு, அங்கத்தினர் என்ற ஏற்றத் தாழ்வு கிடையாது (மத் 23:8) சபை ஊழியர்கள் தங்களை பிறரிடமிருந்து வித்தியாசப்படுத்திக் காட்டும் அங்கிகளை அணிவதில்லை, அல்லது தடைசெய்யப்பட்ட குரு, ரெவரெண்ட் என்ற பட்டங்களை சுமப்பதில்லை. (மத். 23:5-10)

நாமகரண சபைகளின் தோற்றம், வளர்ச்சி பற்றி நேர்மையான வாசகர் வியப்படையக் கூடும். இன்னும் அவர்கள் ஏன் தொடர வேண்டுமென்று வினவக் கூடும். மனிதன் உருவாக்கிய சில சபைகள் தோன்றிய காலத்தையும் பிற விவரங்களையும் கீழே காணலாம்.

| ஆண்டு | தோன்றிய இடம் | நிறுவனர் | நாமகரண சபையின் பெயர் |
|---|---|---|---|
| கி.பி. 606 | ரோமாபுரி | போனிபேஸ் III | ரோமன் கத்தோலிக்க சபை |
| .. 1530 | ஜெர்மனி | மார்ட்டின் லூதர் | லூதரன் சபை |
| .. 1534 | இங்கிலாந்து | ஹென்றி VIII | எப்பிஸ்கோப்லியன் |
| .. 1536 | சுவிட்சர்லாந்து | ஜான் கால்வின் | பிரஸ்பிட்டேரியன் |
| ... 1550 | இங்கிலாந்து | ராபர்ட் பிரவுன் | பிராந்தியசபை |
| .. 1607 | ஹாலந்து | ஜான் ஸ்மித் | பின்னாள் பரிசுத்தவான்கள்/மார்மன்ஸ் |
| ... 1739 | இங்கிலாந்து | ஜான் வெஸ்லி | மெதடிஸ்ட் |
| .. 1830 | அமெரிக்கா | வில்லியம் மில்லர் | ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் |
| .. 1886 | அமெரிக்கா | மேரி பெக்கர் எடி | கிறிஸ்தவ விஞ்ஞானம் |
| .. 1872 | அமெரிக்கா | சி.டி. ரஸல்ஸ் | யெகோவா விட்னஸ் |
| .. 1900 | அமெரிக்கா | ஒரு குழு | பெந்தே கோஸ்தே |

தேவனுடைய அநாதித் திட்டத்தின் படி, உண்மையான புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவம் கி.பி. 33ம் ஆண்டிலே ஜெருசலேமில் நிறுவப்பட்டதாக நாம் ஏற்கனவே கூறியதை நினைவில் வையுங்

கள். கிறிஸ்துவை தங்கள் இரட்சகர் என விசுவாசிக்கும் மக்கள் இன்று பிரிந்து கிடக்கும் பரிதாப நிலையைக் கண்டு நாம் மன வேதனையடைகிறோம். அவர்களுடைய போதனைகளும் வழிபாடுகளும் சுவிசேஷத்திற்கு மாறுபட்டவைகளாக இருக்கின்றன. இவ்வாறான பிரிவினை வேதாகமத்தில் கண்டிக்கப்பட்டுள்ளது (1 கொரி 1:10-13,3;3-5) தன்னைப் பின்பற்றுவோரிடையே ஒற்றுமை நிலவ வேண்டி கிறிஸ்து ஜெபித்தார். (யோ 17:20-23) கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? (1 கொரி 1:13). இல்லை! அப்படியானால் அவரை பின் பற்றுபவர்களிடையே பிரிவினை ஏன்? நாமகரண சபைகள் உண்மையான கிறிஸ்தவத்துக்கு முற்றிலும் எதிரானது. அவைகள் இன்று செயல்படத் தேவையான காரணம் எதுவுமில்லை.

## இறுதியாக....

தூய்மையான புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவம் தேவனுடைய திட்டம். அது தீர்க்கத் தரிசனமாக உரைக்கப்பட்டு, வாக்களிக்கப்பட்டு, தயாரிக்கப்பட்டு, ஜெருசலேமில் கி.பி. 33ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டதாக நாம் ஏற்கனவே தெளிவாகப் பார்த்தோம். நாமகரண சபைகள் பல நூற்றாண்டுக்குப் பின்னரே தோன்றியதாகவும் நாம் பார்த்தோம். தேவனையா, மனிதனையா? யாரைப் பின்பற்றப் போகிறீர்கள்? - இதற்கான முடிவை நீங்கள் இப்போது எடுக்க வேண்டும்.

சாலை விதிகளை மீறி, அலட்சியப்படுத்தி சாவைத் தழுவிக் கொள்ளும் பல மக்களை நாம் கண்டும், அவர்களைப் பற்றிக் கேட்டும் வருகிறோம். பிரிவினைகளை விட்டு விட்டு, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அங்கம் பெற அழைக்கும் தேவனுடைய வேண்டுகோளை அலட்சியப்படுத்தி விட்டு, நிராகரித்து விட்டு நாம் நடந்தால், அதன் விளைவு பெரும் ஆபத்தானது என்பதை சிந்தித்துப் பார்க்கிறோமா? அவருடைய கற்பனைகளை அலட்சியப் படுத்திவிட்டு தண்டனைக்குத் தப்ப முடியுமா?

தவறான ஒரு ரயில் வண்டியில் ஏறி அமர்ந்து, தான் சேர வேண்டிய இடத்திற்கு சரியாகப் போய் சேர்ந்து விடலாம் என்று உண்மையாகவே நம்பினார் ஒரு நபர். ஆனால் அவருடைய நம்பிக்கை வீணாய்ப் போயிற்று அதன் விளைவு : ஏமாற்றம், வெட்கம், பண விரயம். இத்தகைய ஒரு மோசமான அனுபவத்தைப் பெற்ற நபர், இந்த கட்டுரையாளர் தான்! அதுபோலவே, மனிதன் உண்டாக்கிய சபையின் மேல் நீங்கள் உண்மையான விசுவாசத்

த்தை வைத்தாலும், அச்சபையின் சட்டதிட்டங்களை முழுமையாக ஏற்றுக் கொண்டாலும், அச்சபைத் தலைவரை உண்மையாகவே பின்பற்றிச் சென்றாலும் உங்களுக்குக் கிடைக்கவிருப்பது வெறும் ஏமாற்றமே - மோட்சம் அல்ல'. பிதாவின் சித்தத்தின்படி நட-வாதவர்களை அவர் ஒதுக்கி விடுவார் என்பதை தயவுசெய்து நினைவில் வையுங்கள் (மத் 7:21-23).

அருமை நண்பரே ! இச்செய்தி உங்கள் இதயத்தைத் தொடுகிறதா? இதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? நீங்கள் கிறிஸ்-தவராக இல்லாத பட்சத்தில், கர்த்தரை விசுவாசித்து, உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பி, இயேசுவை கிறிஸ்து என அறிக்கையிட்டு, உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட முழுக்கு ஞானஸ்நானம் பெற்று, கர்த்தரால் அவருடைய சபையில் கிறிஸ்தவனாக ஏற்றுக் கொள்ளப்பட, இன்றே செயல்படுங்கள் என விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறோம் (எபி 11:6; அப் 2:38; 8:37; மாற்கு 16:1-6) இக்காரியத்தில் தேவன் தாமே உங்களுக்கு உதவுவாராக! நீங்கள் வீழ்ந்து போனவராக இருப்-பின், தயவு செய்து மனந்திரும்பி மீண்டுமாக சபைக்கு வந்து, மரண பரியந்தம் உண்மையாயிருங்கள்; ஜீவ கிரீடத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் (வெளி 2:10).

**P. PAULRAJ** **எஸ். எஸ். ராஜன்**

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தைகளின் விளைவாக ஏற்படும் துன்ப துயரங்கள் அவனுக்கு மேலும் மேலும் தீச்செயல்களை செய்யும் உற்சாகத்தையே அளித்து வருகிறது!

அவனது அழிவுப்பாதை முடிவற்றது. மதுவின் போதையில் நோவாவை மதிஇழக்கச் செய்தான்; ஆபிரகாமை பொய்யனாகவும் கோழையாகவும் மாற்றினான்; யோபுவை குழந்தையற்றவனாகவும் வறுமையின் பிடிக்குள் தள்ளினான்; தாவீதை காமுகனாகவும், கொலையாளியாகவும் மாற்றினான்; பேதுருவை பொய்யனாக்-கினான்; யூதாசை காட்டிகொடுப்பவனாகவும் தற்கொலை செய்து கொள்பவனாகவும் மாற்றினான். நண்பரே! உங்களை எந்த இடத்தில் வைத்துள்ளான்? ''பிசாசுக்கு இடங்கொடாமல் இருங்கள்'' (எபே 4:27) என அப்போஸ்தலர்பவுல் எபேசு பட்டணத்தாருக்கு அறிவுரை கூறுவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்,

(25-ம் பக்கம் பார்க்கவும்)

# தேவன் என் ஜெபங்களைக் கேட்கிறார்!

நமது ஜெபம் தேவனால் கேட்கப்படுகிறது என்ற வாக்குத்தத்தம் வேதாகமத்தில் பல இடங்களில் காணப்படுகிறது மேலோட்டமாக வேதாகமத்தைப் படித்தாலும் ஜெபத்தின் பலன்கள் பற்றிய பல வாக்குறுதிகளைப் பார்க்க முடியும்

ஆனால், நமது ஜெபங்கள் எப்பொழுதும் வல்லமையுள்ளவைகளாக இல்லை என்பதே உண்மை. நாம் கேட்கிறோம், கிடைப்பதில்லை; தேடுகிறோம், கண்டடைவதில்லை. ஏன்?

கர்த்தருக்குக் கீழ்ப்படியும் பிள்ளைகளுக்கே ஜெபத்திற்கான பலன் வாக்களிக்கப்பட்டுள்ளது, பாவத்தில் வாழ்வோருக்கும் கீழ்ப்படியாதவர்களுக்கும் எந்த வாக்குத்தத்தமும் வழங்கப்படவில்லை. அதேபோல, அலட்சியப்படுத்துவோருக்கும், அவநம்பிக்கை கொண்டோருக்கும், அக்கறையற்றோருக்கும் எந்த வாக்குறுதியும் தரப்படவில்லை. மாறாக, இப்படிப்பட்ட குணம் படைத்தோர்கள் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டுள்ளனர். இவர்களுடைய ஜெபங்களை தேவன் கேட்பதுமில்லை; பதிலளிப்பதுமில்லை. 'அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியால் நாம் வேண்டிக் கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்ளுகிறோம்'' என யோவான் கூறுகிறார். (1 யோ. 3,22),

நமது ஜெபங்கள் வல்லமையற்றவைகளாக இருப்பின், ''எல்லா கற்பனைகளுக்கும் நான் கீழ்ப்படிய முயற்சிக்கிறேனா? அவருடைய பார்வையில் பிரியமானவற்றை தினமும் செய்ய முயற்சி செய்கிறேனா? ''என்ற கேள்விகளைக் கேட்டு, நம்மை திருத்திக் கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, நமது ஜெபம் செய்யும் முறையை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ''மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் ''என இயேசு கூறினார். (மத்.21:22) விசுவாசத்தோடு ஜெபம் செய்வது பற்றி நாம் நிறைய கேள்விப்படுகிறோம் பாரம்பரியத்தின் படி, ஒருவனுடைய ஜெபம் கேட்கப்பட, தேவனை விசுவாசிக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. அது உண்மையா- இருந்த போதிலும், சற்று மிகைப்படுத்திய கூற்றாக காணப்படவில்லையா? தேவனை விசுவாசிக்காதவன் ஜெபம் எங்கே செய்-

வான்? ஜெபம் கேட்கப்படுவதில் நாம் விசுவாசம் வைப்பது பற்றி தான் இயேசு இங்கு குறிப்பிட்டார். கர்த்தர் நமது ஜெபங்களைக் கேட்டு, விரும்பி அவற்றிற்குப் பதிலளிக்கத் தயாராக இருக்கிறார் என்பதை விசுவாசிக்க வேண்டும். ஏனோ தானோவென்று கடமைக்காக செய்வதாகத்தான் பலருடைய இன்றைய ஜெபங்கள் அமைந்துள்ளன. நமது ஜெபங்களுக்குப் பதிலை எதிர்பார்த்துச் செய்வதாகக் காணோம். நாம் விசுவாசிக்க வேண்டும். தேவன் நமது ஜெபங்களைக் கேட்கிறார்; அவற்றிற்குப் பதில் அளிக்கிறார் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் செய்யும் ஜெபங்களுக்குப் பதில் கிடைக்கும். யாக்கோபு கூறியது போல, ''சந்தேகப்படாமல், விசுவாசத்தோடே கேட்போம்'' (யாக்.1:6)

மூன்றாவதாக, விடா முயற்சி தேவை. ஜெபத்தைப் பற்றி வேதாகமம் கூறும் ஒரு காரியம், விடா முயற்சி. ''இடைவிடாமல் ஜெபம் செய்யுங்கள்'' (1 தெச 5:17). ''ஜெபத்திலே உறுதியாகத் தரித்திருங்கள்'' (ரோமர் 12:12). விட்டு விடாமல் தொடர்ந்து ஜெபம் செய்ய வேண்டிய அவசியத்தைப் பற்றி நமது கர்த்தராகிய இயேசு தனது சீடர்களுக்குக் கூறுவதை லூக்கா 11, 18 அதிகாரங்களில் காணமுடியும். ஜெபங்கள் கேட்கப்படாமல் போவதற்கான காரணங்களில் ஒன்று - விரைவிலே ஜெபம் செய்வதை விட்டு விடுவதும் சோர்ந்து போவதும் தான்.

அடுத்து, நமது ஜெபத் தேவைகளை தெளிவாகவும் குறிப்பிட்டும் செய்ய வேண்டும். பொதுவாகவும், குறிப்பற்றும் செய்யும் ஜெபங்களுக்குப் பலன்களை நாம் பெற்றுக் கொண்டாலும் அவற்றை இனங்காணத் தவறிவிடுகிறோம். வேதாகமத்தில் காணப்படும் ஜெபங்களை உன்னிப்பாகக்கவனித்தால், எப்போதுமே ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக அவை செய்யப்பட்டதாகவே இருக்கும் மன்னிப்பிற்காக வேண்டினாலும், தவறிப் போனவர்களுக்காக ஜெபம் செய்தாலும் குறிப்பிட்டு ஜெபம் செய்யுங்கள்.

கர்த்தர் நமது ஜெபங்களைக் கேட்க வேண்டுமானால் நாம் கீழ்ப்படிய வேண்டும்; ஜெபத்தின் வல்லமையை விசுவாசிக்க வேண்டும்; இடைவிடாமல் ஜெபம் செய்ய வேண்டும்; குறிப்பிட்ட காரியங்களுக்காக ஜெபம் செய்ய வேண்டும். இச்சட்டங்களைக் கடைபிடித்து உங்கள் ஜெபத்திற்கான பலன்களை தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

**ராய் பீஸ்லி**

# நிறைவானது எது?

வேதாகமத்தில், 1 கொரிந்தியர் 13ம் அதிகாரத்தின் 8 முதல் 13 வசனங்களை தங்களுக்குச் சாதகமாக எடுத்துக்கொண்டு இன்றும் அற்புதங்கள் நடைபெறுகின்றன என பெரிய விளம்பரங்களைச் செய்து வரும் பெந்தெகோஸ்தே கூட்டத்தாரை நாம் அறிவோம்.

"நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோகும் (வ 10) எனக் கூறும்போது, ஆவிக்குரிய கொடைகள் (வ 8) ஒழிந்து போகுமென்பதையும், விசுவாசம், நம்பிக்கை, அன்பு நிலைத்திருக்கும் (வ 13) என்பதையும் பவுல் விளக்குகிறார். பவுல் குறிப்பிடும் காலமானது, 'நிறைவானது வரும்போது' என்பதை நாம் சரியாக புரிந்து கொண்டால் தான் விளங்கும்.

பலர் எண்ணுவதுபோல, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து பவுல் இவ்வாறு சொல்லவில்லை ஏனெனில் 'நிறைவானது' என்பது உயிரற்ற ஒரு பொருள். 'நிறைவான பொருள்' என்று இதை மொழியாக்கம் செய்யலாம். இயேசுவைக் குறிப்பிடும் சகல இடங்களிலும் கிரேக்க மொழியில் ஆண்பாலில் 'அவர்' என்றே கூறப்பட்டுள்ளது. 'நிறைவானவர்' என்று இருக்குமே தவிர, 'நிறைவானது' என ஒருபோதும் அவர் அழைக்கப்படமாட்டார். பரலோகத்தில் பூரண வாழ்வில் நிலைத்திருப்பது கற்றியும் பவுல் இங்கு கூறவில்லை, பரலோகம் என்ற வார்த்தையே இங்கு உபயோகிக்கப்படவில்லை. மாறாக, 'இவ்வுலகத்தின் கொடைகளைப் பற்றித்தான் அவர் கூறுகிறார். (வ 1-8) மீண்டுமாக, 'ஒழிந்துபோகும்' என்ற வார்த்தைக்கு முடிந்து போகும் என்றுதான் அர்த்தம். தேவனுடைய விருப்பமானது 'பரிபூரணம்' எனவும் (ரோமர் 12:2) 'பூரணப் பிரமாணம்' (யாக் 1:25) எனவும் குறிப்பிடப்படுகின்றன.

அன்பையும், ஞானத்தைப்பற்றியும் அவர் கூறவில்லை. ஏனெனில் ஏற்கனவே பலர் அவற்றை அடைந்திருந்தனர். (1 கொரி 14:19; 1 கொரி 2:1-6) அத்தோடு, அன்பானது அற்புதமான கொடை அல்ல. கிரேக்கத்தில், அன்பு பெண்பாலால் குறிக்கப்படும் ஒரு சொல்லாகும். இங்கோ அஃறிணையில் கூறப்பட்டுள்ளது.

ஆதிகால கிறிஸ்தவர்கள் 'குறைவாக' அறிந்திருந்தனர். கிறிஸ்துவின் பேரிலுள்ள அவர்களுடைய விசுவாசத்தையும், அவர்

களை அழைத்துச் செல்ல மீண்டும் அவர் வருவதையும் தவறான போதனைகள் திசை திருப்பி விட்டு விட்டன. (யோ 14:3)

சத்திய ஆவியானவர் வரும்போது ''சகல சத்தியத்திற்குள்ளும்'' அப்போஸ்தலர்களை வழி நடத்துவதாக இயேசு கூறியிருந்தார் (யோ 16:13). ஏனெனில், இப்போது ''கண்ணாடியில் நிழலாட்டமாய்'' (1 கொரி 13:12) பார்த்தார்கள். ''குழந்தைக் கேற்றவைகளை ஒழித்து விடும் போது'' தெளிவாகப் பார்க்க முடியும் (வ 11). கொடைகள் ஒழிந்து போயின (1 கொரி 13:8); இனி அவை தேவையில்லை (எபே 4:8-16); இப்போது விசுவாசத்தோடு நடக்கவேண்டுமேயன்றி, கண்ணால் கண்டு அல்ல (1 கொரி 5:7; நோ 8:24,25). விசுவாசத்தை **நற்செய்தி** உண்டாக்குகிறது; (ரோ 10:17; 2 தீமோ 3:16,17). ''அதுவே நிறைவானது''.

**மைக்கில் எல். கிங்**

(21-ம் பக்கத் தொடர்ச்சி)

பிசாசுக்கு ஒருவன் ''இடம் கொடுப்பது'' (சந்தர்ப்பம் அளிப்பது) எவ்வாறு? ஒருவேளை மிகச்சுருக்கமான விளக்கம் கீழ்க் கண்டவாறு தான் இருக்கும்: சாத்தானுக்கு சந்தர்ப்பங்களை அளிக்கும் இடங்கள், உறவுகள், நிலைகள் போன்றவற்றில் தன்னை ஈடுபடுத்தும் போது. ஒரு மனிதன் சாத்தானிடம் தன்னை அர்ப்பணிக்கும் அழகான ஒரு அழைப்பிதழை நீட்டுகிறான்!

ஆத்துமாக்களை அழிப்பதே அவனுடைய வேலை. அவன் யாரை 'விழுங்கலாமென்று வகை தேடி' சுற்றித்திரிகிறான் (1 பேதுரு 5:8), நல்லவற்றை நமக்குத் தருவது போன்ற தோற்றத்தைக் காட்டி வீழ்த்திடும் வஞ்சகப் புத்தி படைத்தவன், அவன் 'ஒளியின் தூதனுடைய' வேஷத்தைத் தரித்துக் கொள்வான் (2 கொரி 11:14). அவனுக்கு ஊழியஞ்செய்ய கள்ள அப்போஸ்தலர்களும், கபடமுள்ள வேலையாட்களும் இருக்கிறார்கள் (மத் 25:41 2 கொரி 11:13,15).

இப்படியாக சுறுசுறுப்பாகவும், தந்திரமாகவும் இயங்கும் ஒரு படையை தன்னிடம் வைத்துக் கொண்டு, வெற்றிகரமாக தன் இழி செயல்களை நடத்தி வரும் 'பிசாசின் தந்திரங்களிலிருந்து' நம்மை தற்காத்துக் கொள்ள நாம் மிகவும் உஷாராக இருக்க வேண்டும் (எபே 6:11).

(28—ம் பக்கம் பார்க்கவும்)

# தேவன் அளித்துள்ள ஒரு மகத்தான புத்தகம்

''தேவனின் புத்தகம்'' என அழைக்கப்படும் வேதாகமத்தைப் பற்றி நாம் விரிவாகத் தெரிந்து கொள்வோம். வேதாகமம் என்ற வார்த்தைக்கு 'புத்தகம்' என்று அர்த்தம். உலகின் சகல புத்தகங்களும் சேர்ந்தாலும் அதற்கு ஈடாகாது; எல்லாப் புத்தகங்களிலும் மேலானது, முக்கியத்துவம் பெற்றது வேதாகமம் என்பதையே இது குறிக்கிறது. அது ஏழைகளின் சொத்து, வியாதிக்காரருக்கு ஆறுதல் அளிக்கும் அன்பன், பசித்தோருக்கு உணவளிக்கும் உபகாரி, வீழ்ந்து போனவர்களின் வழிகாட்டி மரித்துக் கொண்டிருப்போரின் நம்பிக்கை நட்சத்திரம். கிறிஸ்தவத்தின் அஸ்திவாரம் வேதாகமம் தான்;

உண்மையைச் சொன்னால், 'வேதாகமம்' என்றோ, பரிசுத்த வேதாகமம்' என்றோ இந்த மகத்தான நூல் தன்னைப் பற்றிக் கூறவில்லை. இது மனிதன் அதற்கு அளித்த பெயர். 'தேவனுடைய வார்த்தை' (எபி. 4:12) என்றும் ''வேத வாக்கியங்கள் (யோவான் 5:39) என்றும் ''தேவனுடைய வாக்கியங்கள்'' (I பேதுரு 4:11) என்றும் அது தன்னை நமக்கு அறிமுகப் படுத்துகிறது.

உலகிலுள்ள வேறு புத்தகங்களைப் போல் அல்லாமல், ''தேவனுடைய வார்த்தை பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட புத்தகம். தேவனுடைய சத்திய வசனங்களை பரிசுத்த ஆவியானவரின் உதவியோடும், வழி நடத்துதலோடும் மனிதர்கள் ''எழுதினார்கள். வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது ; தேவனுடைய மனிதன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பித்தலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது'' (2 தீமோ. 3:16, 17).

வேதாகமம் ஒரு பெரிய நூல் நிலையம் போன்றது. அது ஒரே ஒரு புத்தகம் அல்ல கிட்டத்தட்ட 40 வேறுபட்ட எழுத்தாளர்கள் 1600 வருடங்களுக்கு மேலாக எழுதிய, 66 புத்தகங்களின் தொகுப்பே வேதாகமம், பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்ற இருபெரும் பாகங்களாக இது பிரிக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்களும், புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்களும் அடங்கியுள்ளன. முதல் 5 புத்தகங்களான ஆதியாகமம்,

யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் என்பவை பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு மோசேயால் எழுதப்பட்ட சட்டப் புத்தகங்களாகும். யோசுவா, நியாயாதிபதிகள், ரூத், சாமுவேலின் 2 புத்தகங்கள், இராஜாக்களின் 2 புத்தகங்கள்' நாளாகமத்தில் 2 புத்தகங்கள், எஸ்றா, நெகேமியா, எஸ்தர் ஆகியவை, வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் இஸ்ரவேல் மக்கள் நுளைந்த காலந்தொட்டு தொடர்ந்த' எட்டு சரித்திர நூல்களாகும். யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னப்பாட்டுஆகியவை கவிதை நூல்களாகும். பழைய ஏற்பாட்டில் மிஞ்சிய புத்தகங்கள் யாவும் தீர்க்கத்தரிசன நூல்கள். ஏசாயா முதல் மல்கியா வரையிலான இப்புத்தகங்களில், கிறிஸ்துவின் வருகையைப் பற்றிய பல தீர்க்கத்தரிசனங்களையும், அவருடைய ராஜ்யம் நிறுவப்படுவதைப் பற்றியும் நாம் காணலாம்.

புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு நூல்களாகிய மத்தேயு லூக்கா, யோவான் ஆகியவை கிறிஸ்துவின் வாழ்க்கை பற்றிக் கூறுகின்றன. இப்புத்தகங்களை எழுத வேண்டிய காரணத்தை யோவான் வாயிலாகக் காணலாம்:

"இந்தப் புத்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீடர்களுக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது." (யோவா 20:30, 31). அடுத்து, அப்போஸ்தலருடைய நடபடிகள் என்ற ஒரு சரித்திர நூல் கி.பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியில் கர்த்தருடைய சபை நிறுவப்பட்டு, அது வளர்ச்சியடைந்து வந்த விதத்தை விறுவிறுப்பாக வர்ணிக்கிறது இந்நூல். "உலகம் எத்திசையிலும் சென்று சுவிசேஷத்தை அறிவியுங்கள்" என இயேசு தனது சீடர்களுக்கு அளித்த கட்டளையை நிறைவேற்ற அவர்கள் எடுத்த நடவடிக்கைகளை விவரிக்கிறது இந்நூல் அதன் பின்னர் 21 கடிதங்கள் அல்லது நிருபங்கள் என்ற புத்தகங்களைப் பார்க்கிறோம். இவை கிறிஸ்தவர்களுக்கு (சில தனிப்பட்டவர்களுக்கும் சில பிராந்திய சபைகளுக்கும், எழுதப்பட்டன. இவற்றில், அப்போஸ்தலர் பவுல் எழுதிய கடிதங்கள் 14ம். யாக்கோபு எழுதியது 1ம், பேதுரு எழுதியவை 2ம், யோவான் எழுதி

யவை 3ம், யூதா எழுதிய 1ம் அடங்கும், கிறிஸ்தவ வாழ்க்கை எவ்வாறு வாழ்வது என கிறிஸ்தவர்களுக்கு அறிவுறுத்தும் கடிதங்களாக இவை எழுதப்பட்டன. ஒரு பாவி, இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறுகிறது அப்போஸ்தலருடைய நடபடிகள் நூல். இரட்சிக்கப்பட்டவர்கள், வீழ்ந்து போகாமல், தங்களுடைய இரட்சிப்பு நிலையைக் காத்துக்கொள்ளுவது எவ்வாறு என்பதை மீதி 21 புத்தகங்களும்தெரிவிக்கின்றன. இறுதியாக, வெளிப்படுத்தின விசேஷம் என்ற நூல் உள்ளது. புதிய ஏற்பாட்டில் ஒரே தீர்க்கதரிசன புத்தகம் இது மட்டுமே. இப்புத்தகத்தின் பல பகுதிகள் வித்தியாசமான குறியீட்டு மொழியில் (சங்கேத மொழியில்) எழுதப்பட்டுள்ளது. ஏனெனில் வேத கலாபனையும், கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த அடக்குமுறையும் பயங்கரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு காலக் கட்டத்தில், சாத்தனையும் அவன் தோழர்களையும் முறியடித்து கிறிஸ்துவும் அவரது சபையும் அடையும் இறுதி வெற்றியைப் பற்றி கிறிஸ்தவர்களுக்கு உற்சாகம் ஊட்டும் விதத்தில் அது அவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அத்துடன், பரலோகத்தின் அழகை முன்னோட்டமாக இப்புத்தகம் வர்ணிக்கிறது.

வேதாகமம், நமது வாழ்வில் கிடைக்க இயலாத, விலை மதிப்பற்ற மா பெரும் பொக்கிஷம், கவனத்தோடும், ஜெபத்தோடும், தாழ்ச்சியான உள்ளத்தோடும் அதை தினமும் நாம் படிப்போம்.

Roy Beasley — எஸ். எஸ் ராஜன்

(25-ம் பக்கத் தொடர்ச்சி)

சாத்தானிடமிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ளவும் அவனை எதிர்க்கவும் நமக்குத் தரப்பட்டுள்ள மிகப்பெரிய ஆயுதம் 'தேவனுடைய சர்வாயுதவர்க்கம்' ஆகும். இந்த ஆயுதத்தை அணிந்து கொள்ளத்தக்கதாக, அவருடைய வசனத்தை பயபக்தியுடனும், சிந்தையுடனும் தினமும் படித்து நம்மை பாதுகாத்துக் கொள்வோம் (எபே 6:11-17).

ஒரு ஆத்துமாவை சோதிக்க, தனக்குக் கிடைக்கும் ஒரு சிறிய சந்தர்ப்பத்தைக் கூட சாத்தான் தவறவிடுவதில்லை. என்றாலும், கர்த்தர் நம்மை ஆதரவற்ற நிலையில் விட்டுவிடவில்லை. ''பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்'' (யாக்கோபு 4:7).

Edsel Burleson — SSR

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9:00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8:00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi-110049.
Thursdays-9:00 to 9-15 P. M.
Fridays- 9:00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-12 45 to 1:00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2: 5 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bankalore 560004.
Sundays 1- :45 to 2:00 P.M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## வாசகர்கள் கவனத்திற்கு

ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் உங்களுக்கு வந்து கொண்டிருக்குமானால், தயவுகூர்ந்து, வாசகர் எண்ணைக் குறிப்பிட்டு எங்களுக்கு தகவல் கொடுக்க வேண்டுகிறேன்.

புதிதாக 'திருமறை ஆசான்' இதழ் வேண்டுவோர் அஞ்சல் அட்டையில், உங்கள் விலாசத்தைத் தெரிவிப்பீர்களானால் அனுப்பிக் கொடுப்போம்.

நன்றி - ஆசிரியர்

Published by Church of Christ Kangayam and Printed at Jeevasakthi Press. Erode.
Editor. E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to:
The Editor
**THIRUMARAI AASAAN**
Post Box No. 27 KANGAYAM-638 701